GWOP 246/2023

நாள் 10.12.2024.

எம.சா 1

பெயர் குணசேகரன்

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரமாணபத்திரத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் பள்ளியில் டிரைவராக வேலை பாரத்தேன். என் மகள் இறந்ததிலிருந்து குழந்தையை பார்த்துக்கொள்வதற்காக வேலையை விட்டுவிட்டேன். நான் வேலையை விட்டு விட்டதாக சொல்வது பொய் என்றாலும் நான் வேலைக்கு லீவ் போட்டுவிட்டுதான் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றாலும் இன்று வரை வேலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. என் மகளுக்கு 29.05.2019 அன்று திருமணம் நடந்தது. எனக்கு ஒரு பெண், ஒரு பையன். பையன் பெயர் அரவிந்தன். என் மனைவி அரசு பள்ளியில் தலைமை ஆசிரியையாக இருக்கிறார். வெளியூரில் வேலை செய்கிறார் என்றால் வீட்டிலிருந்து ஒரு கிமீ தூரத்தில் உள்ள பள்ளியில் வேலை செய்கிறார். திருமணத்திற்கு முன்பு நியூசிலாந்து போகவேண்டும் அங்கேயே இருக்க வேண்டும் என்ற எந்த விவரமும் எங்களிடம் தெரிவிக்கவில்லை என்று அபிடவிட்டில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. 10.12.2018 அன்று என் மகளை நியூசிலாந்து அனுப்புவதற்கு medical fitness test க்காக சென்னை Appello மருத்துவமனைக்கு என் மகளை நானும் என் மனைவியும் மனுதாரரின் உறவினரும் அழைத்துபோனோம் என்றால் சரி. அது நியூசிலாந்து போய்வருவதற்கான test எடுக்கபோனோம். அங்கு நிரந்தரமாக தங்குவதற்காக இல்லை. அதற்கான மருத்துவ செலவுகளை மனுதாரர் தரப்பில் தான் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் செய்தேன். அப்படி test எடுத்தது திருமணத்திற்கு முன்பு என்றால் சரி. என் மகள் என்ன படித்திருந்தார் என்றால் BE படிந்திருந்தார். ஒன்று அல்லது இரண்டு பேப்பர் அரியர்ஸ் இருந்தது. மேற்படி அரியர்ஸ் உள்ள விவரத்தை மனுதாரரிடம் சொல்லவில்லை என்றாலும் BE முடித்திருப்பதாகத்தான் சொன்னோம் என்றால் சரியல்ல. அரியர்ஸ் உள்ள விவரத்தையும் சொல்லிவிட்டோம். சொல்லவில்லை என்றாலும் டிசம்பர் 2021ல் தான் அரியர்ஸ் எழுதி பாஸ் செய்தார் என்றால் அரியர்ஸ் எழுதி

P. Guna...

பாஸ் செய்தது உண்மை. அரியர்ஸ் உள்ள விவரத்தை சொல்லிவிட்டோம். மனுதாரர் குழந்தையை பார்க்க வரும்போது நானும் என் மனைவியும் அனுமதிக்கவில்லை என்றாலும் அதனால் தான் குழந்தையை பக்கத்தில் உள்ள கோவிலில் வைத்து மனுதாரர் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வளவும் பொய் இரண்டு வருடம் குழந்தையை பார்க்க வரவே இல்லை. இரண்டாவது பிறந்த நாளுக்கும் வரவில்லை. அதன்பிறகு ஒரு நாள் வந்து குழந்தையை தூக்கி போய் கோவிலில் வைத்து பார்த்துவிட்டு போனார். குழந்தை பிறந்தவுடன் போன் செய்து சொன்னோம் பெண் குழந்தையா என்று கேட்டுவிட்டு போனவர்தான். பிறப்பு சான்றிதழ் எடுப்பதற்காக கள்ளக்குறிச்சி போனாம் என்று சொல்லியிருப்பது பொய் என்றாலும் சொத்து கேட்டு தகராறு செய்ய மனுதாரர் வீட்டிற்கு போனோம் என்றாலும் அப்படி தகராறு செய்ததால் மனுதாரர் வீட்டினர் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுத்தனர் என்றாலும் நான் அபிடவிட் 3 வது பாராவில் சீர்காழி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல. போலிசார் கணவர் மனைவியை சேர்ந்து வாழ வைக்க அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. பிறப்பு சான்றிதழ் எங்களிடம் தான் உள்ளத என்றால் சரியல்ல. குழந்தைக்கு 8 மாதம் ஆனபோது மனுதாரர் வீட்டிற்கு பிறப்பு சான்று கேட்கபோனோம். அப்போது என் மகளின் மாமியார் குழந்தையை கூட தூக்கவில்லை. நாங்கள் பிறப்பு சான்றிதழ் எடுத்து கொண்டு வந்துவிட்டோம். என் மகளின் மாமியார் நாங்கள் அடிக்கபோனதாகவும் சொத்து எழுதி கேட்டதாகவும் பொய் புகார் கொடுத்துவிட்டார். போலிசார் எங்களை கூப்பிட்டு விசாரித்தார்கள். திருமணமாகி 22 நாளில் மனுதாரர் வெளிநாடு போய்விட்டதாக சொன்னோம். மனுதாரரிடம் போனில் பேசி திருமணம் செய்து கொண்டு 22 நாளில் ஏன் மனைவியை விட்டு விட்டு போனாய் என்று உடனே வரவேண்டும் என்று சொன்னார்கள். என் மகள் உங்கள் அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார் என்று மனுதாரரிடம் சொன்னபோது என் அம்மா செய்தால் சரியாகத்தான் இருக்கும் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார். போலிசார் மனுதாரரின் அம்மாவை கூப்பிட்டு விசாரித்தபோது நான் தவறான புகார் கொடுத்துவிட்டேன் வாப்பஸ் வாங்கி கொள்கிறேன் என்று சொல்லி புகாரை வாப்பஸ் வாங்கிவிட்டார். நானும் என் மனைவியும் தான் மனுதாரர் வீட்டிற்கு

P. Gurudan.

போனோம் என்றாலும் என் மகள் எங்களுடன் வரவில்லை என்றாலும் சரியல்ல. குழந்தையும் தூக்கி கொண்டு மகளையும் அழைத்துகொண்டுதான் போனோம். அவர்கள் வீட்டிற்கு எப்படி நாங்கள் தனியாக போகமுடியும். 27.02.2021 அன்று குழந்தையின் முதல் பிறந்த நாளை முன்னிட்டு அழைத்ததற்கு அந்த பக்கமே வரமாட்டேன் என்று மனுதாரர் கூறியதாக சொல்வது பொய் என்றாலும் அதற்கு 10 நாட்களுக்கு முன்பு என் மகளிடம் ATM இல்லை என்றும் என் அண்ணன் அக்கவுண்டிற்கு பணம் அனுப்புங்கள் என்று சொன்னதால் 17.02.2021 அன்று என் மகன் அரவிந்தன் அக்கவுண்டிற்கு 15 ஆயிரம் ரூபாய் மனுதாரர் பணம் அனுப்பினார் என்றால் சரியல்ல. குழந்தைக்கு வயிற்றால் போனது ஒரு மாதமாக நிற்கவில்லை அதனால் என் மகள் மருத்துவ செலவுக்கு பணம் அனுப்புங்கள் என்று கேட்டதால் 15,000/- ரூபாய் மனுதாரர் அனுப்பினார். குழந்தைக்கு உடல் நலம் சரியில்லை பார்க்க வாருங்கள் என்று என் மகள் அழைத்தபோதும் என் அம்மாவிடம் கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொன்னவர் அம்மாவிடம் கேட்டு விட்டு அது சரியாகிவிடும் என்று என் அம்மா சொல்கிறார் அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும் என்று சொல்லிவிட்டார். நான் சொல்வது பொய் என்றாலும், பணம் அனுப்பியதற்கு ஆதாரம் உள்ளது என்றால் பணம் அனுப்பியது மருத்துவ செலவிற்காகத்தான். மனுதாரருடன் பிறந்தவர்கள் ஒரு தங்கையும் தம்பியும் இருக்கிறார்கள் என்றால் சரி. என் மகள் இறந்ததற்கு ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண். 242/2022 ச/பி. 174 (3) குவிமுச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரி. RDO விசாரணை செய்து வரதட்சணை கொடுமை என் மகளின் இறப்பிற்கு காரணம் இல்லை என்று அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி. மனுதாரர் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்று 31.08.2023 அன்று மயிலாடுதுறை SP யிடம் புகார் கொடுத்து அவர் சீர்காழி DSP க்கு forward செய்தார் என்றால் சீர்காழி DSP என்னையும் என் மனைவியையும் அழைத்துவிசாரித்தார் என்றாலும் குழந்தையை மனுதாரரிடம் காண்பிக்கும்படியும் ஒப்படைக்கும்படியும் அறிவுறுத்தினார் என்றாலும் நாங்கள் அதற்கு மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. குழந்தையை மனுதாரரிடம் கொடுத்துவிடும்படியும் உங்கள் பொருட்களை உங்களுக்கு திருப்பி வாங்கி தருகிறோம் எவ்வளவு பணம் கேட்டாலும் வாங்கி

P. Govindan.

தருகிறோம் என்று தான் சொன்னார்கள். நாங்கள் அவர்கள் உள்நோக்கத்தோடு கேட்கிறார்கள் அதனால் குழந்தையை தரமாட்டோம் என்று சொல்லிவிட்டோம். மனுதாரர் வெளிநாட்டில் இருந்தபோது மனுதாரர் மற்றும் அவரின் குடும்பத்தினர் மீது சீர்காழி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC Case (DVC 8/2021) தாக்கல் செய்தோம் என்றால் சரி. எப்படியாவது மனுதாரரை வெளிநாட்டிலிருந்து வரவைப்பதற்காக தாக்கல் செய்தோம். அப்படியும் அவர் வரவில்லை. என் மகள் இறந்தபிறகு மனுதாரர் மீது போட்ட வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டோம். மனுதாரரை வரவைக்க வேண்டிதான் பொய்யான வழக்கை வரதட்சணை கேட்பதாக தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. வரதட்சணை கேட்டதாக போடவில்லை. மனுதாரரை வெளிநாட்டிலிருந்து வரவழைக்கதான் போட்டோம். ஒன்றரை வருடமாகியும் அவர் வரவில்லை. மனுதாரர் வெளிநாட்டில் இருந்து வந்து DVC Case போட்டிருந்தாலும் பரவாயில்லை என்று என் மகளை கள்ளக்குறிச்சியில் தனிவீடு எடுத்து தனிக்குடித்தனம் வைக்க கூட்டிப்போனாரா என்றால் சரி. ஆனால் தனிக்குடித்தனம் வைத்தபிறகு கேஸை வாப்பஸ் வாங்கசொல்லி என் மகளை தெந்தரவு செய்து என் வீட்டிற்கு மீண்டும் என் மகளை அனுப்பிவிட்டார். பொய்யாக நாடகமாடினார். 21.03.2022 அன்று என் மகளுக்கு 12 சவரன் செயின், மோதிரம், வளையல் வாங்கி கொடுத்திருக்கிறார் என்றால் திட்டம்போட்டு அப்படி செய்திருக்கிறார். அப்படி உண்மையிலேயே வாங்கிகொடுத்திருந்தால் என் மகள் பெயரில் பில் போடவேண்டிய அவசியம் இல்லை. என் மகள் கடையில் மனுதாரர் என் மகளின் பெயரை Spelling mistake இல்லாமல் பில்லில் அடிக்கும்படி சொன்னதாக சொன்னார். நான் இனிமேல் அதுபோல் நகை வாங்கினார் உன் பெயரில் பில் போடவேண்டாம் என்று சொல்லு என்று சொன்னேன். திட்டம்போட்டு அப்படி செய்திருக்கிறார். அதன்பிறகு என் மகளை எங்கள் வீட்டிற்கு அனுப்பிவிட்டு அன்றே வக்கீல் நோட்டீஸ் அனுப்பிவிட்டு வெளிநாட்டிற்கும் போய்விட்டார். கள்ளக்குறிச்சி KVM நகைக்கடையில் வாங்கிய நகைக்கு scooty விழுந்தது என்றாலும் அதையும் என் மகள் பெயரில் பதிவு செய்ய மனுதாரர் சொன்னார் என்றாலும் அந்த scooty எங்களிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த Scooty மனுதாரரிடம் தான் உள்ளது. எங்களிடம் இல்லை. நானும் என் மனைவியும் வேலைக்கு போகிறோம் என்றாலும் காலை 9.00 மணிக்கு வேலைக்கு போனால் மாலை 6.00

P. Gruchm.

மணிக்கு தான் வீட்டிற்கு வருவோம் என்றாலும் குழந்தையை பராமரிக்காமல் பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு போகிறோம் என்றாலும் வழக்கிற்காக வேலையை விட்டுவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் இறந்தபிறகு என் பேத்தியை வளர்ப்பதற்காக வேலையை விட்டுவிட்டேன். இயற்கை பாதுகாவலர் என்ற முறையில் தாய் இறந்தபிறகு தந்தையிடம் தான் குழந்தையை ஒப்படைக்க வேண்டுமென்றால் தந்தையிடம் தான் குழந்தை வளரவேண்டுமென்றால் சரியல்ல. குழந்தையை இப்போது கொண்டுவந்து நிறுத்தினால் கூட குழந்தைக்கு அப்பா யார் என்று தெரியாது. மனுதாருக்கும் இந்த குழந்தை தன்னுடைய குழந்தைதானா என்று தெரியாது. என் மனைவியை குழந்தை அம்மா என்று தான் கூப்பிடுகிறது தயவு செய்து அதை பிரித்துவிடாதீர்கள். மனைவி குழந்தையுடன் சந்தோஷமாக இருந்ததற்கு மனுதாரர் போட்டோ எடுத்து வைத்திருக்கிறார் என்றால் பெற்ற குழந்தையை தந்தைக்கு தெரியாமல் இருக்காது என்றாலும் மனுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் மனுவை அனுமதித்து குழந்தையை அவர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றால் சரியல்ல. மனுதாரர் வேறு திருமணம் செய்து கொண்டால் குழந்தை நிலைமை என்ன ஆகும். குழந்தை பெயரில் எதிர்காலத்திற்காக 15 லட்சம் ரூபாய் பாலிசி போட்டிருக்கிறோம். என் மனைவி retire ஆனால் வரும் தொகை குழந்தைக்குத்தான். குழந்தையை பக்கத்து வீட்டில் விட்டு விட்டு போவதில்லை விளையாடுவதற்கு சில சமயம் போகும் அவ்வளவுதான். மனுவை தள்ளுபடி செய்யவேண்டும். மனுதாரர் வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய பிறகு என் மகள் இறந்து விட்டதாக சொல்கிறேன் என்றாலும் அந்த வக்கீல் நோட்டீஸில் கண்ட சங்கதிகள் உண்மையானவை என்றாலும் என் மகளின் இறப்பிற்கும் மனுதாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வக்கீல் நோட்டீஸில் என் மகளை பற்றி சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை.

P. Geetha

என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

10/12/24